# ஆரோவில் (Auroville)

ஆரோவில், உலகெங்கிலுமிருந்து 50,000 நபர்கள் வரை வசிப்பதற்கேற்ப தென்-கிழக்கு இந்தியாவில் சோழமண்டல கடற்கரைக்கு அருகில், புதுச்சேரிக்கு வடக்கே சுமார் 10 கி.மீ தொலைவிலும் மற்றும் சென்னைக்கு தெற்கே 150 கி.மீ தொலைவிலும் திட்டமிடப்பட்டு உருவாகிவரும் ஒரு உலகளாவிய நகரியம் ஆகும்.

ஆரோவில்லின் அம்சங்களை பிற சமூகங்களிலும், உலகம் முழுவதும் செயல்படுத்தப்படும் வேறு பல திட்டங்களிலும் காணமுடியும் என்றபோதிலும், **மனித ஒற்றுமை** மீதான உலகின் முதல் மற்றும் சர்வதேச அளவில் அங்கீகாரமும் பெற்ற ஒரே ஆராய்ச்சி மையமாகவும் ஆரோவில் திகழ்கிறது. மேலும், இங்கு மனித குலத்தின் எதிர்கால கலாச்சார, சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆன்மீகத் தேவைகள் குறித்து அக்கறை காட்டப்படுவதுடன், அவை குறித்து செயல் ரீதியிலான ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. யுனெஸ்கோவால் இது அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்ற உண்மையிலிருந்து இதன் உலகளாவிய முக்கியத்துவத்தை அறிந்துகொள்ளலாம். ஆரோவில் அமைந்துள்ள நாடான, இந்தியாவின் நடுவண் அரசு, ஆரோவில்லின் பெருந்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளதோடு, ஆரோவில்லிற்கு முழுமையான ஆதரவையும், ஊக்கத்தையும் அளித்து வருகிறது.

**வரலாறு**

மானுட ஒற்றுமைமீதான பரிசோதனைக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு உலகளாவிய - சர்வதேச நகரியம் என்ற கருத்தாக்கமானது, இந்தியாவின் மகத்தான தத்துவஞானியும், யோகியுமான ஸ்ரீ அரவிந்தர் அவர்களின் எழுத்துக்களிலிருந்து முதலில் உருவானதாகும். இருப்பினும், ஸ்ரீ அரவிந்தரின் சக ஆன்மீக பணியாளரும் “அன்னை” என அறியப்படுபவருமான, ஃபிரான்சில் பிறந்த மிர்ரா அல்ஃபாஸா அவர்களே இக்கருத்தாக்கத்திற்கு உறுதியான வடிவத்தை தந்து, “ஆரோவில்” என்று பெயரிட்டவர். அப்போது அவர் கீழ்க்கண்டவாறு விளக்கமளித்தார்.

**“அனைத்து நாடுகளையும் சேர்ந்த ஆண்களும், பெண்களும், அனைத்து சமயங்கள், அனைத்து அரசியல் மற்றும் அனைத்து தேசிய அடையாளங்களைக் கடந்து, சமாதானத்திலும் மற்றும் வளர்ச்சிபெறும் ஒத்திசைவுடனும் வாழ்வதற்கேற்ற உலகளாவிய நகராகத் திகழ ஆரோவில் விரும்புகிறது. மானுட ஒருமைப்பாட்டை அடைவதே ஆரோவில்லின் லட்சியம் ஆகும்.”**

ஆரோவில் குறித்து, 1965 – ல் வெளியிடப்பட்ட முதல் பொது அறிக்கை இதுவே ஆகும். பிறகு, 1966 - ம் ஆண்டில் ஆரோவில் கருத்தாக்கமானது, இந்திய அரசால், யுனெஸ்கோவின் பொதுச்சபையின் முன்பாக வைக்கப்பட்டு, ஒருமனதாக அதன் அங்கீகாரத்தைப் பெற்றது. இரண்டாண்டுகளுக்குப் பிறகு, 1968 - ம் ஆண்டு பிப்ரவரி 28 ஆம் நாள், இந்த நகரியத்தை துவக்குவதற்காகவும், ஆரோவில்லின் சாசனத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவும், 124 நாடுகளிலிருந்தும் மற்றும் அனைத்து இந்திய மாநிலங்களிலிருந்தும் பிரதிநிதிகளாக இளைஞர்கள் வருகை தந்தனர். ஆரோவில்லின் சாசனம் கீழ்க்கண்டவாறு கூறுகிறது:

1. ஆரோவில், குறிப்பிட்ட யாருக்கும் சொந்தமானதல்ல. இது, மனித குலம் முழுமைக்கும் சொந்தமானதாகும். ஆனால், ஆரோவில்லில் வாழ்வதற்கு, தெய்வீக உணர்வு நிலையை ஏற்று, விரும்பி பணிபுரிபவராக ஒருவர் இருத்தல் வேண்டும்.
2. முடிவில்லாத கல்வி, நிலையான வளர்ச்சி மற்றும் முதுமையடையாத இளமை ஆகியவற்றைக் கொண்ட இடமாக ஆரோவில் விளங்கும்
3. இறந்த காலத்தையும், எதிர்காலத்தையும் இணைக்கும் ஒரு பாலமாக விளங்க ஆரோவில் விரும்புகிறது. உள்ளிருந்தும் மற்றும் வெளியிலிருந்தும் பெறப்படும் அனைத்து கண்டுபிடிப்புகளின் ஆதாயங்களை உள்வாங்கி, ஆரோவில், எதிர்கால மெய்நிலைகளை நோக்கி துணிவுடன் முன்செல்லும்.
4. உண்மையான மனித ஒற்றுமையின் உயிருள்ள பண்புருவிற்கான பருப்பொருள் சார்ந்த மற்றும் ஆன்மீக ஆராய்ச்சிக்கான மையமாக ஆரோவில் திகழும்.

இதே வேளையில் யுனெஸ்கோ, இத்திட்டத்திற்கு தனது ஒருமனதான ஆதரவை மீண்டும் வெளிப்படுத்தியதோடு, 1970 மற்றும் 1983 – ம் ஆண்டுகளிலும் திரும்பவும் தனது ஆதரவை தெரிவித்தது.

1988 – ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஒரு நாடாளுமன்ற மசோதாவின் கீழ் “ஆரோவில் அறக்கட்டளை” உருவாக்கப்பட்டு, இந்திய அரசால் இதற்கு சிறப்பு அந்தஸ்து வழங்கப்பட்டது. தனித்து செயல்படும் மற்றும் அதே சமயத்தில் ஒருங்கிணைந்து இயங்கும் மூன்று அமைப்புகள் இந்த அறக்கட்டளையின் அங்கங்களாக உள்ளன. ஆரோவில்லில் வசிக்கும் செயலர் ஒருவரை உள்ளடக்கிய ஒரு நிர்வாக குழு, சர்வதேச ஆலோசனை கவுன்சில் மற்றும் ஆரோவில்லில் வசிக்கின்றவர்களின் பட்டியலில் இடம்பெற்று, ஆரோவில்லில் வசிக்கின்ற 18 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுள்ள அனைத்து ஆரோவிலியன்களும் இடம்பெற்றுள்ள குடியிருப்பாளர் சபை என்பவையே அந்த மூன்று அமைப்புகள் ஆகும்.

ஆரோவில்லிற்காக தேர்வு செய்யப்பட்ட இடம், கடலை நோக்கி கிழக்காக விரிகின்ற மற்றும் தீவிர மண் அரிப்பால் பாதிக்கப்பட்ட இடமாக இருந்தது. 1960 – களின் இறுதியில் அரசால் வெளியிடப்பட்ட அதிகாரப்பூர்வமான அறிக்கையில், இப்பகுதியானது “பாலைவனமாக மாறுகின்ற உச்சகட்ட நிலையில்” உள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்ததால், இப்பகுதியின் சுற்றுச்சூழலை மறுஉருவாக்கம் செய்வதும், இப்பகுதியில் மீண்டும் மரம், தாவரங்களை வளர்ப்பதுமே இத்திட்டத்தின் தொடக்க முன்னுரிமையாக இருந்தது. பல ஆயிரக்கணக்கான மரங்களும், புதர்செடிகளும் நடப்பட்டு (தற்போது 2 மில்லியனுக்கும் மேல்), மண் அரிப்பு கட்டுப்பாடு செயல்திட்டம் தொடங்கப்பட்டது. இதன் விளைவாக, ஒரு பசுமையான மற்றும் பரவலாக காடுகள் காணப்படும் நிலப்பரப்பாக தற்போது இந்த பகுதி விளங்குகிறது. இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டபோதே, சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத மற்றும் பொருத்தமான தொழில்நுட்பம் மற்றும் நிலைத்திருக்கக்கூடிய ஆற்றல் உருவாக்கல் அமைப்புகளை பயன்படுத்தி நகரை உருவாக்குவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

**தற்போது ஆரோவில்**

இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ள, நகரியத்திற்கான பெருந்திட்டம், ஸ்பைரல் கேலக்ஸி வடிவத்தை அடிப்படையாக கொண்டு, நான்கு ஆரப் பகுதிகளை உள்ளடக்கியிருப்பதோடு, (சர்வதேச, கலாச்சார, தொழில் மற்றும் குடியிருப்பு பகுதிகள்), சுற்றிலும் பசுமையான நிலப்பரப்பு பகுதியையும் கொண்டுள்ளது. இந்த நான்கு பகுதிகளின் பார்வை முனையாக, புவியியல் ரீதியில் நகரியத்தின் மையப்பகுதியில் 29.5 மீட்டர் உயரமும், 36 மீட்டர் விட்டமும் கொண்ட ஒரு பெரிய உருண்டை வடிவ அமைப்பு அமைந்துள்ளது. “நகரின் ஆன்மா” என்று பொருள்படும் “மாத்ரிமந்திர்” என அழைக்கப்படும் இந்த இடம், மௌனத்தில் மனதை ஒருமுகப்படுத்துவதற்கான அமைவிடமாக திகழும். மாத்ரிமந்திரைச் சுற்றி அழகு மிளிரும் தோட்டங்கள் நிரம்பிய நிலப்பரப்பு அமைந்திருக்கும்.

தொடர்ந்து நிலையாக விரிவடைந்து வரும் ஆரோவில் சமூகத்தில், 47 நாடுகளைச் சேர்ந்த 2200 – க்கும் மேற்பட்ட குடியிருப்புவாசிகள் தற்போது உள்ளனர். இவர்கள், ஏறக்குறைய 20 ச.கி.மீட்டர் பரப்பில் கிராம நிலங்களோடு கலந்து காணப்படும் ஆரோவில் நிலப்பகுதியில் பல்வேறு அளவு மற்றும் அமைப்புகளுடன் உருவாக்கப்பட்ட 100 – க்கும் மேற்பட்ட குடியிருப்பு பகுதிகளில் வசிக்கின்றனர். வேளாண்மை மற்றும் பசுமையாக்கப் பணிகள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, கல்வி, உடல்நலப் பராமரிப்பு, கிராமப்புற சேவை நடவடிக்கைகள், கட்டுமானப்பணி, மின்னணுவியல், வர்த்தகம், கலை மற்றும் நிர்வாகம் ஆகிய பல்வேறு துறைகளில் ஈடுபட்டு பணியாற்றுகின்றனர். இவர்கள் அனைவரும் இந்திய ரூபாயில் மாதாந்திர அடிப்படை “பராமரிப்பு” தொகையைப் பெறுகின்றனர் அல்லது இத்திட்டத்திற்கான பங்களிப்பாக, தங்களுடைய சொந்த ஆதாரங்களிலிருந்து அவர்களுடைய பராமரிப்பிற்கான, ஒரு பகுதியை அல்லது முழுத் தொகையையும் அளிக்கும் தன்னார்வலர்கள் ஆவர்.

கீழ்க்கண்ட 5 ஆதாரங்கள் மூலமாக ஆரோவில்லிற்கான பொது நிதி பெறப்படுகிறது: இந்திய அரசு; இந்தியா மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த அரசு சாரா நிறுவனங்கள்; உலகின் பல பகுதிகளில் செயல்படும் 24 ஆரோவில் சர்வதேச மையங்கள் மற்றும் தொடர்பு அலுவலகங்கள்; ஆரோவில்லின் பல வர்த்தக / தொழில் அமைப்புகளின் இலாபத்தில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம்; இந்தியா மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் “ஆரோவில்லின் நண்பர்கள்”; மற்றும் ஆரோவிலியன்களால் அளிக்கப்படும் குறிப்பிடத்தக்க அளவு நிதி ஆகியவையே இந்த ஆதாரங்கள் ஆகும்.

**ஆரோவில்லின் முக்கியத்துவம் மற்றும் சேவை செயல் நடவடிக்கைகள்**

நகரியத்தின் தேவைகளை மட்டும் அல்லது அதைச் சுற்றியுள்ள பூகோள நிலப்பரப்பை சேர்ந்தவர்களின் தேவைகளை மட்டும் பூர்த்தி செய்வது என்பதோடு, ஆரோவில்லின் பணி அடக்கப்படவில்லை. ஆரோவில்லானது, முழு மனித குலத்திற்கான ஆராய்ச்சி மற்றும் பரிசோதனைக்கான மையமாக விளங்குகிறது. வேளாண்மை மற்றும் ஆற்றல் உருவாக்கம் போன்ற நிலைத்திருக்கக்கூடிய செயல்பாடுகளில் ஈடுபடுவதோடு மட்டுமின்றி, **அனைத்து மக்களுக்கும், அனைத்து நாடுகளுக்கும் பயனளிக்கக்கூடிய, நடைமுறை சாத்தியமுள்ள மானுட ஒற்றுமைக்கான அமைப்பு** ஒன்றை முதன் முதலாக இந்த பூமியில் உருவாக்குவதே தனது செயல்திட்டம் என்று ஆரோவில் கருதுகிறது. எனவே, அரசியல், சமய, இன அல்லது கலாச்சார தாக்கங்களிலிருந்து விடுபட்டு, மனித குலத்தினர் அனைவரும் பயனடையக்கூடிய வகையில் உலகளாவிய கருத்துகள், வாழ்க்கை முறைகள் மற்றும் நடைமுறைகளை மாற்றுவதற்கான திறன்மிக்க ஊக்கியாக, ஒரு தனித்துவம்மிக்க மற்றும் முக்கியமான பரிசோதனையாக மற்றும் ஒரு முன்மாதிரியாக இது விளங்குகிறது.

ஆரோவில், தனது சுற்றுச்சூழல் சார்ந்த பணிகளுக்காக ஏற்கனவே தேசிய அளவிலும், மற்றும் சர்வதேச அளவிலும் பாராட்டுகளைப் பெற்றுள்ளது. பல நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் காடுகள் உருவாக்கப்பட்டுள்ளன; இந்த பிராந்தியத்திற்கே உரிய தாவரங்களும், விலங்குகளும் மறு அறிமுகம் செய்யப்பட்டுள்ளன அல்லது அவைகள் இயற்கையாகவே மீண்டும் திரும்பிவந்துள்ளன; மரக்கன்றுகளுக்கான நாற்றுப் பண்ணைகள் நிறுவப்பட்டுள்ளன; மற்றும் மண் பாதுகாப்பு மற்றும் நீர் சேமிப்புக்கான நடைமுறைகளும் விரிவாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், பூச்சிக்கொல்லிகள் மற்றும் நச்சுத்தன்மை வாய்ந்த வேதிப்பொருட்களை பயன்படுத்தாமல், சுற்றுச்சூழலுக்கு நன்மை விளைவிக்கும் வேளாண்மை நடைமுறைகளும், சமீபத்திய வேளாண் - வன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நன்கு ஒருங்கமைக்கப்பட்ட கழிவு மறுசுழற்சி அமைப்பினை ஆரோவில் கொண்டுள்ளது மற்றும் ஆரோவில் அமைந்துள்ள பகுதி முழுவதிலுமமே நீர் வீணாவதை குறைப்பதற்கும் மற்றும் கழிவு நீரை மறுசுழற்சி செய்வதற்குமான தேவை குறித்து விழிப்புணர்வை அதிகரிப்பதற்கும் ஆரோவில் தீவிரமாக செயல்பட்டு வருகிறது.

இப்பணிகளோடு சேர்த்து, இப்பகுதியிலுள்ள கிராமங்களில் செயற்கை ஏரிகளை (குளங்கள் என்று உள்ளூரில் அழைக்கப்படுகின்ற) தூர்வாருகின்ற மற்றும் புதுப்பிக்கும் பணிகளுக்கான ஒரு பெரிய திட்டத்தை ஒருங்கிணைக்க ஆரோவில் செய்த சீரிய பணிக்காக நிலத்தடி நீர்மட்ட உயர்வுக்கான தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது. இது, இக்கிராமங்களின் நீர் கொள்ளளவு திறனை வெகுவாக அதிகரிப்பதுடன், நிலத்தடி நீர்மட்ட அளவுகளை நிலைப்படுத்தவும் உதவும். மேலும், கடற்கரையை ஒட்டியுள்ள பகுதிகளில், நிலத்தடி நீரை அளவிற்கு அதிகமாக எடுப்பதால், உப்புநீர் கலப்பதன் அபாயங்கள் குறித்து விழிப்புணர்வை உருவாக்கும் பணியிலும் ஆரோவில் ஈடுபட்டுள்ளது மற்றும் குறைந்தஅளவு நீரைச்சார்ந்து மேற்கொள்ளப்படும் வேளாண் நடைமுறைகளை அடையாளம் காணவும் மற்றும் அவற்றை அறிமுகப்படுத்தவும் ஆரோவில் விவசாயிகள் சங்கங்களுடன் சேர்ந்து பணியாற்றி வருகிறது மற்றும் திறன்மிக்க நுண்ணுயிர்-தொழில்நுட்பம் குறித்தும் மற்றும் அதன் பயன்பாட்டை அதிகப்படுத்துவதற்கும் ஆலோசனை வழங்கி வருகிறது.

உரிய தொழில்நுட்பத்தை, குறிப்பாக கட்டிடங்களுக்கு ஃபெரோசிமெண்ட் பயன்படுத்தும் தொழில்நுட்பம் - உருவாக்குவதில் அரும்பணியாற்றியுள்ள அறிவியல் ஆராய்ச்சி மையம் என்ற அமைப்புக்கு, அதன் மேம்பாட்டுப் பணிகளுக்காக 1984 முதல், இந்திய அரசால் ஒப்புதல் மற்றும் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இது, ஆரோவில் புவி நிலையத்துடன் (AEI), இணைந்து எதிர்கால நோக்கங்களுக்கான செயல்பாடுகளை மேற்கொள்வதற்கு மற்றுமொரு முக்கிய மையமாக செயல்படுகிறது. ஆரோவில் புவி நிலையம், இந்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி கழகத்தால் (HUDCO), நாடு முழுவதும் உருவாக்கியுள்ள இதுபோன்ற 450 மையங்கள் கொண்ட ஒருங்கமைப்பில் ஒரு அங்கமாகும். ஆரோவில் புவி நிலையம், பயிற்சித் திட்டங்களை மேற்கொள்வதுடன், ஆலோசனை வழங்குதல், கட்டிடங்கள் வடிவமைப்பு ஆகிய பணிகளோடு, இந்நிறுவனமே உருவாக்கிய, சிக்கனமான - அழுத்தப்பட்ட மண் செங்கல் தொழில்நுட்பத்தை பின்பற்றி செய்யப்படும் கட்டுமானப் பணிகளை கண்காணிக்கும் பணியையும் மேற்கொள்கிறது. மண் சார்ந்த கட்டிடக்கலைக்கான யுனெஸ்கோவின் இந்தியா மற்றும் தெற்கு ஆசியாவின் பிரதிநிதியே இந்த அமைப்பின் தலைவராக செயல்படுகிறார். இந்நிறுவனம், 1992 - ம் ஆண்டு, "ஏழைகளுக்கான கட்டிட வடிவமைப்பிற்காக, ஹசன் ஃபாத்தி சர்வதேச விருதைப் பெற்றுள்ளது. 1995 - ம் ஆண்டு, இந்நிறுவனத்தின் செயல்பாடுகளைப் பாராட்டி ஹட்கோ அமைப்பு "மிகச்சிறந்த செயல்பாட்டிற்கான" விருதை அளித்துள்ளது. மேலும், 1994 மற்றும் 1995 - ம் ஆண்டுகளில், மத்திய அரசின், நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகத்தால், இந்தியாவில் சிறந்த கட்டுமானப் பணிக்கான மையம் என்ற அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.

உள்ளூர் கிராமங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு சேவையாற்றுகின்ற, லாபநோக்கற்ற, பயிற்சி வழங்கும் பள்ளியான ஆரோவில் இன்ஸ்டிடியூட் ஆஃப் அப்ளைய்டு டெக்னாலஜி (AIAT) என்பது, ஆரோவில்லில் இயங்கிவரும் மற்றுமொரு கல்வியமைப்பாகும். ஐக்கிய நாடுகள் சங்கத்தின் மில்லேனியம் மேம்பாட்டு இலக்குகளையொட்டி இக்கல்வியமைப்பின் குறிக்கோள் அமைந்திருக்கிறது மற்றும் இப்பிராந்தியத்தில் உள்ள நலிவுற்ற கிராமப்புற மற்றும் கடலோர சமூகங்களில் உள்ள குடும்பங்கள் மற்றும் இளவயதினர் மத்தியில் வறுமையையும் மற்றும் சமூக – பொருளாதார ஏற்றத்தாழ்வையும் அகற்றுவதை நோக்கமாக இது கொண்டுள்ளது. திறன் வழங்கும் பயிற்சி மற்றும் தனிப்பட்ட ஆளுமை மேம்பாடு ஆகியவற்றின் வழியாக, இரு பாலினங்களைச் சேர்ந்த இளவயதினருக்கு ஆற்றலை வழங்குவதன் வழியாகவும் மற்றும் பணியாற்றுவதற்கான அவர்களின் தரநிலையை உயர்த்துவதன் வழியாகவும் இந்நோக்கத்தை அமலாக்கம் செய்யும் பணியில் இது ஈடுபட்டுள்ளது.

பாண்டிச்சேரியில் உள்ள பாரதி பூங்காவை சீரமைக்கும் பணியை மேற்பார்வையிட்டதும், தரங்கப்பாடியில் பாரம்பரிய வரலாற்று சின்ன கட்டிடங்களை மறுசீர் அமைப்பு செய்ததும், மற்றும் சென்னையில் உள்ள அடையார் முகத்துவாரப் பகுதியை, ஒரு ஆரோக்கியமான மற்றும் சுற்றுச்சூழல் ரீதியில், நிலைப்புத்தன்மைகொண்ட இயற்கை பாதுகாப்பு மையமாக மாற்றி, இப்பகுதியில் அதனை மிகச்சிறந்த உத்வேகமளிக்கும் மற்றும் பயிற்றுவிக்கும் அமைவிடமாக மாற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்பும் ஆரோவில்லியன்களால் மிகசமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட, மிக முக்கியமான சமுதாயப் பணிகளாகும்.

**கல்வி:**

ஆரோவில்லின் பன்முக - கலாச்சார கல்வித் திட்டமானது அதன் 6 பள்ளிகள் வழியாக, ஒவ்வொரு குழந்தையும் தனது உள்ளார்ந்த தன்னிலையை கண்டறியவும் மற்றும் தன்னிடமுள்ள அதிகபட்ச திறனை வெளிக்கொணரவும் உதவுகிறது. இக்கல்வி முறை அதிகளவு சுய விருப்பத் தேர்வின் அடிப்படையிலேயே அமைந்ததாகும். இதன்கீழ், மாணவர்கள் தங்கள் விருப்பதிற்கேற்றபடி பாடங்களைத் தேர்ந்தெடுத்து கல்விபயில அனுமதிக்கிறது. குழந்தைகளின் சமநிலையான மற்றும் ஆரோக்கியமான வளர்ச்சிக்காக, விளையாட்டு மற்றும் உடற்கல்வியும் வலுவாக ஊக்குவிக்கப்படுவதுடன், அழகுணர்வு திறன்களை உருவாக்குவதற்காக கலைப் பயிற்சிகளும் இதற்கிடையே வழங்கப்படுகின்றன.

ஆரோவில்லைச் சேர்ந்த குழந்தைகளோடு கூடுதலாக, ஆரோவில்லால் நிறுவப்பட்டு, அதன் மேற்பார்வையின் கீழ் செயல்படுகின்ற 6 பகல் அல்லது இரவு பள்ளிகளின் வழியாக, சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த சுமார் 700 குழந்தைகள், ஆரோவில்லின் கல்வித் திட்டங்களிலிருந்து பயனடைகின்றனர்.

**கலை மற்றும் கலாச்சாரம்**

ஆரோவில்லில் வழக்கமாக திரைப்படங்கள் திரையிடப்படுகின்றன. அதுமட்டுமல்லாது, நாடகம், இசை, நாட்டியம், சேர்ந்திசை, கவிதை வாசிப்பு, கண்காட்சிகள், பவர்பாய்ண்ட் பிரசண்டேஷன், சொற்பொழிவுகள் ஆகியவையும் அவ்வப்போது ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்படுகின்றன. இவையனைத்தும் பொதுவாக ஆரோவில்வாசிகளுக்கும் மற்றும் விருந்தினர்களுக்கும் வழக்கமாக இலவசமாக நடத்தப்படுகின்றன. ஆரோவில் மற்றும் அதனைச் சுற்றி அமைந்துள்ள புவியியல் பிராந்தியத்தில் உள்ள பள்ளிகளின் ஒத்துழைப்போடு ஆண்டுக்கு இருமுறை நடத்தப்பட திட்டமிடப்பட்டுள்ள திரைப்பட விழா இரண்டாவது முறையாக 2011-ல் நடத்தப்பட்டது.

**உடல்நலம்:**

அலோபதி மற்றும் பல் மருத்துவம் போன்றவற்றுடன் ஹோமியோபதி, ஆயுர்வேதம், பிசியோதெரஃபி, அக்குபஞ்சர், மசாஜ் மற்றும் பிற சிகிச்சைகள் முறைகள் உட்பட அடிப்படை சுகாதார மருத்துவத்திற்கான வேறுபல மாற்று முறைகளும் இங்கு பயன்படுத்தப்படுகின்றன.

அடிப்படை மருத்துவ வசதிகளுடன் கூடிய ஆரோவில் சுகாதார மையமானது, ஆரோவில் சமூகத்தினருக்கும் மற்றும் சுமார் 200 உள்ளூர் நோயாளிகளுக்கும், தனது பிரதான கட்டிடம் மற்றும் கிராமங்களில் உள்ள 7 துணை மையங்கள் வழியாகவும் தினந்தோறும் மருத்துவ சேவையாற்றி வருகிறது. மேலும், ஆரோவில்லால் பயிற்சியளிக்கப்பட்ட 30-க்கும் அதிகமான உள்ளூர் பெண் சுகாதாரப் பணியாளர்கள், சுற்றியுள்ள 17 கிராமங்களில் முதலுதவி, வீட்டிலேயே சிகிச்சை செய்து கொள்வதற்கான அறிவுரைகள், அடிப்படை சுகாதாரக் கல்வி போன்றவற்றை அளிப்பதுடன், கிராமங்களில் குடும்பத்திற்கான சிறிய தோட்டங்களை வளர்ப்பதன் வழியாக, சிறந்த ஊட்டச்சத்தைப் பெறுவதற்கான அவசியத்தை ஊக்குவிக்கின்றனர்.

ஆரோவில்லுக்காக, அதன் மையப் பகுதியில் அமைந்துள்ள, ஒருங்கிணைக்கப்பட்ட ஆரோக்கிய மையத்திற்கான கட்டுமானப்பணி தற்போது நடைபெற்று வருகிறது.

**வர்த்தக நடவடிக்கைகள்:**

ஆரோவில்லில் 125 வர்த்தக நிறுவனங்களும் மற்றும் 70 சேவை அமைப்புகளும் தற்போது இயங்கி வருகின்றன. கைவினைப் பொருட்கள், கிராஃபிக் வடிவமைப்பு மற்றும் அச்சு, உணவு பதப்படுத்துதல், எலக்ட்ரானிக்ஸ் மற்றும் எஞ்சினியரிங், மெட்டல் ஓர்க்கிங் மற்றும் காற்றாலை உற்பத்தி, துணி நெய்தல் மற்றும் பேஷன், கம்ப்யூட்டர் சேவைகள், கட்டிட கட்டுமானம் மற்றும் கட்டிட வடிவமைப்பு போன்ற பணிகள் வர்த்தக நிறுவனங்களை செயல்பாடுகளுள் உள்ளடங்கும்.

நகரியத்தில் நடைபெற்று வரும் மேம்பாட்டுப் பணிகளுக்காக தங்கள் லாபத்தில் மூன்றில் ஒரு பங்கை அல்லது அதற்கும் அதிகமாக வழங்குகின்ற இந்நிறுவனங்கள், படிப்படியாக தன்னிறைவை ஆரோவில் பெறுவதற்காக ஆற்றவேண்டிய முக்கியப்பங்கை கொண்டுள்ளன. இந்நிறுவனங்கள், ஆரோவில் சமூகத்தினருக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பை பராமரிப்பதற்கான நிதியை திரட்ட உதவுவதுடன், உள்ளூர் கிராமங்களைச் சேர்ந்த ஏராளமான நபர்களுக்கு வேலைவாய்ப்பும், பயிற்சியும் அளித்து, அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரவும் மற்றும் நியாய வர்த்தக கண்ணோட்டத்தில் மதிப்புமிக்க திறன்களை அவர்கள் பெறவும் உதவுகின்றன. தற்போது, ஆரோவில்லில் 4000 முதல் 5000 வரையிலான உள்ளூர் மக்கள் பணிபுரின்றனர். இதன் மூலமாக, சுற்றியுள்ள பகுதிகளுக்கு குறிப்பிடத்தக்க அளவு நிதி சார்ந்த ஆதாயங்கள் கிடைக்கின்றன.

**அமைப்பு:**

நகரியத்தின் அடிப்படை நிர்வாக தேவைகளைப் பூர்த்தி செய்ய அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்ற விரும்புகின்ற தன்னார்வலர்களிலிருந்து, நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை "ஆரோவில் கவுன்சில்" மற்றும் "பணிக்குழு" போன்ற அமைப்புகளின் உறுப்பினர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். இவர்களது அதிகாரம் தொடரும் தன்மை உடையதல்ல. பெரும்பாலான முக்கிய முடிவுகள், குறிப்பாக சர்ச்சைக்குரிய விஷயம் குறித்த முடிவுகள் குடியிருப்பாளர்கள் சபை அல்லது பொது கூட்டங்களிலேயே எடுக்கப்படும். இதில் அனைத்து ஆரோவிலியன்களும், புதிதாக இடம்பெற்றவர்களும் கலந்துகொண்டு தங்கள் கருத்துக்களை தயக்கமின்றி தெரிவிக்கலாம். நகரியத்தின் அன்றாட நிர்வாகச் செயல்பாட்டிற்கு அந்தந்த துறைகளுக்கு உரித்தான பணிக்குழுக்கள் சுயமாக முடிவுகளை மேற்கொள்ளலாம்.

**சுருக்கத்தொகுப்பு:**

ஆரோவில், மனிதகுலத்தின் எதிர்கால நலனிற்கான ஒரு உண்மையான நம்பிக்கையாக விளங்குகிறது. ஏனெனில், பிற முக்கியப் பணிகளோடு சேர்த்து, இந்த பூமியில், அனைத்து மானுடர்களின் சார்பில் அரசியல் சார்பற்று, பல நாடுகளைச் சேர்ந்தவர்களின் பங்கேற்பில் மனித ஒற்றுமைக்கான பரிசோதனை மேற்கொள்ளப்படும் ஒரே இடமாக ஆரோவில் உள்ளது. இத்திட்டமானது, ஏறத்தாழ கடந்த 43 ஆண்டுகளுக்கும் மேலாக அளவிலும், வீச்சிலும் தொடர்ந்து வளர்ந்துகொண்டே வருகிறது. தொடர்ந்து உயர்ந்து வரும் உத்வேகத்துடன், இவ்வளர்ச்சியானது மேலும் தொடரும்.

**ஆரோவில், குறித்த கூடுதல் விபரங்களுக்கு தயவுசெய்து www.auroville.org – ஐ காணவும் அல்லது தொடர்புகொள்க:** அவுட்ரீச் மீடியா, மல்டிமீடியா மையம், ஆரோவில் 605 101, தமிழ்நாடு, இந்திய, மின்னஞ்சல்: outreachmedia@auroville.org.in. (ஜனவரி 2012)